# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
# தனி அலுவலர் திரு.சு.சம்பத்குமார் அவர்களின்
# அவசர கூட்ட நடவடிக்கை நாள் 08.03.2019
## <u>தீர்மான நகல்</u>

ந.க.எண்:1062/2017/எச்1

1) பிளாஸ்டிக் கழிவு மேலாண்மைத்திட்டம் 2016. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306 இன் கீழ் பிளாஸ்டிக் கழிவு துணை விதிகள் மற்றும் நிர்வாக கட்டணங்களை நடைமுறைப் படுத்த நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் கடிதம் ந.க.எண் 33160/2016/பி3 நாள் 18.04.2017 இல் குறிப்பிட்ட அறிவுரையின் படி நகர்மன்ற தீர்மான எண் 02 நாள் 26.04.2017 மற்றும் நகர்மன்ற தீர்மான எண் 53 நாள் 19.06.2017 ஆகிய தீர்மானங்களில் நகர் மன்ற ஒப்புதல் பெறப்பட்டும், மாவட்ட அரசிதழில் வெயிடப்பட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தன.

இந்நிலையில் தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் கடிதம் ந.க. எண் 44555/2013/பி3 நாள் 28.02.2019 இல் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 (சட்ட எண். 29/1986) இல் பிரிவு 3,6 மற்றும் 25 களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306–ன் படி 2019–ஆம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12–இன் கீழ் பிளாஸ்டிக் மொத்த விற்பனை, உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், விற்பனை செய்தல், எடுத்துச் செல்லுதல் மற்றும் நிதி திருத்தம் செய்யவும் நெகிழி பயன்படுத்துதல் முதலியன தடை செய்யப்பட்டு அபராத தொகை விதிக்கப்பட்டுள்ளதை கீழ்க்கண்டவாறு உப விதிகளில் ஏற்படுத்தவும் இந்நகராட்சியின் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணைவிதிகள் 2016 துணை விதி எண் 5 உட்பிரிவு 8(1)–ஐ நீக்கம் செய்து கீழ் கண்டவாறு திருத்தம் செய்யலாம்.

எனவே நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் தற்போதைய அறிவுரையின் படி கீழ் கண்டவாறு பிளாஸ்டிக் கழிவுகள் துணை விதிகள் 2016 மற்றும் அபராதக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு அதனை நடைமுறைப் படுத்துவதற்கான அதிகாரம் மற்றும் மேல் முறையீட்டு அதிகாரம் கீழ் காணும் அலுவலர்களுக்கு வழங்கவும்,

1. (i) **செயலாக்க அதிகாரி :** நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர்.

   (ii) **ஆய்வு நடத்தும் அதிகாரி:** ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.

   (iii) **மேல்முறையீட்டு அலுவலர்:** இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.

   (iv) **தண்டனைகள் விதிக்கும் முறைகள்:** இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு முதல்முறை இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறையான குற்றத்திற்கு அட்டவணை 1ல் கண்டுள்ளவாறு நிர்ணம் செய்யப்பட்டுள்ள அபராதத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே (SPOT FINE) ஸ்தல அபராதங்கள் வசூலிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல் செய்யப்படும். நான்காவது முறையாக மீறுபவருக்கு உடனடியாக தொழில் உரிமம் இரத்து செய்யப்படும்.

2. **வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு**

   (i) மொத்தமாக (Whole Sale)

   சேமித்தல்/ வழங்குதல் / கொண்டு செல்லுதல் / விற்பனை செய்தல் / பகிர்ந்தளித்தல்.

   (ii) வணிக வளாகள், துணிக்கடைகள் பல்பொருள் அங்காடிகள், திரை அரங்குகள், திருமண மண்டபங்கள், மதுபான கூடங்கள், தொழிற்சாலைகள், பள்ளி கல்லூரி நிறுவனங்கள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்கள்.

   (iii) மளிகை கடைகள், மருந்து கடைகள், பழக்கடைகள், காய்கறி கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள்.

   (iv) சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோரக்கடைகள் மற்றும் இதர வணிக நிறுவனங்கள்.

3. **இந்த துணை விதியை மீறினால் செலுத்தும் அபராதம்**

   இந்த துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கும் பிறகு இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணைப்படி இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார். துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசு படுத்துவர்

4. அட்டவணை 1–ல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 / பொது சுகாதார சட்டம் 1939 இன்படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

5. **மேல் முறையீட்டுக்கு உரிமை**

   கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் இந்த துணை விதிகளில் பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமையுள்ளவர்கள் ஆவர்.

எனவே அனைத்து நகராட்சிகளிலும் சீரான அபராத விகிதங்களை நிர்ணயம் செய்யும் வகையில் 1920 வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 306 இன் படி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணைவிதிகள் 2016 துணை விதி பிரிவு 9.1 மற்றும் அட்டவணை 1 ஐ ரத்து செய்தும் ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட அபராத கட்டண விகிதங்களை ரத்து செய்தும் நகராட்சி நிர்வாக

ஆணையர் அவர்களால் குறிப்பிடப்பட்ட அபராத விகிதங்களை கீழ் காணும் விவரப்படி நிர்ணயம் செய்து உட்புகுத்துவதற்கும் விளம்பரம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 50000/ இக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அட்டவணை I**

**இணைப்பு பட்டியல் VIII-A**

பிரிவு 306 (28–A) இன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்.

| வ. எண் | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல். | இருபத்தைந்தாயிரம் ரூபாய்<br>ரூ.25,000/– | ஐம்பதாயிரம் ரூபாய்<br>ரூ.50,000/– | ஒரு லட்சம் ரூபாய்<br>ரூ.1,00,000/– |
| 2 | கூணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | பத்தாயிரம் ரூபாய்<br>ரூ.10,000/– | பதினைந்தாயிரம் ரூபாய்<br>ரூ.15,000/– | இருபத்தைந்தாயிரம் ரூபாய்<br>ரூ.25,000/– |
| 3 | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | ஓராயிரம் ரூபாய்<br>ரூ.1,000/– | இரண்டாயிரம் ரூபாய்<br>ரூ.2,000/– | ஐந்தாயிரம் ரூபாய்<br>ரூ.5,000/– |
| 4 | சிறிய வணிக விற்பனையாளர்களால் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | ஒரு நூறு ரூபாய்<br>ரூ.100/– | இருநூறு ரூபாய்<br>ரூ.200/– | ஐநூறு ரூபாய்<br>ரூ.500/– |

**அலுவலக குறிப்பு.** மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.353

2) இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள விவரப்படியான பணிகளை செய்வதற்கு **06.03.2019** தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வேங்கம்மையார் உயர் நிலைப்பள்ளியில் நுழைவு வாயில் கதவு மாற்றி அமைக்கும் பணி | 50,000 | P.கந்தசாமி ஒப்பந்ததாரர் | **0.29** சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | K.R.ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | **1.71** சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீரை சுத்தகரிப்பு செய்வதற்கு பயன்படுத்தப்படும் **2019–20**ஆம் ஆண்டிற்கு திரவ குளோரின் வாங்குதல் | 7,00,000 | M/s.Shriniketha Enterprises ஒப்பந்ததாரர் | **1.05** சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.Sridharan Chemicals ஒப்பந்ததாரர் | **5.04** சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 3 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளிலும் உள்ள பல வகையான நீர் மூழ்கி மின் மோட்டார்கள், கம்பரசர்கள், ஜெட் மற்றும் மோனோபிளாக் மோட்டார்கள், பேனல் | 6,00,000 | M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | **0.58** சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. சசிகலா எலக்ரிக்கல் ஓர்க்ஸ் | **2.53** சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | போர்டுகள், ஸ்டார்ட்டர்கள், ஒயரிங் மற்றும் பைப் லைன்கள் 2019–20ஆம் ஆண்டிற்கு பராமரிப்பு பணி | | ஒப்பந்ததாரர் | |
| 4 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீரினை சுத்தகரிப்பு செய்ய பயன்படுத்தும் படிகாரம் (Sulphate of Alumina) 2019–20ஆம் ஆண்டிற்கு வாங்குதல் | 1,00,000 | M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.05 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. சசிகலா எலக்ரிக்கல் ஓர்க்ஸ் ஒப்பந்ததாரர் | 5.26 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 5 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஆணையாளர் அறையில் CC TV Camera பொருத்தும் பணி | 1,20,000 | M/s.Jayam Computers ஒப்பந்ததாரர் | 1.28 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.PSR Computers ஒப்பந்ததாரர் | 2.85 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 6 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட புதிய ஆஸ்பத்திரி வீதியில் உள்ள அம்மா உணவகத்தின் Steam line, gas line and regulater மாற்றி அமைக்கும் பணி | 1,35,000 | M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 0.76 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. சசிகலா எலக்ரிக்கல் ஓர்க்ஸ் ஒப்பந்ததாரர் | 4.00 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 7 | கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் ஆணையாளர் அறையில் Air Conditioner (AC) விநியோகம் செய்து பொருத்துதல், UPVC Door பொருத்துதல் மற்றும் Corridor tiles பதிக்கும் பணி | 2,50,000 | V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 0.56 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | K.R.ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | 1.50 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :-**

1. மேற்படி பணிகளில் வ.எண்.1–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள P.கந்தசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
2. வ.எண்.2–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s.Shriniketha Enterprises அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
3. வ.எண்.3–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
4. வ.எண்.4–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
5. வ.எண்.5–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s.Jayam Computers அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
6. வ.எண்.6–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
7. வ.எண்.7–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள V.தங்கராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.354 அலுவலக குறிப்பு வரிசை எண்.1 முதல் 7 முடிய அங்கீகரிப்பட்டது

ந.க.எண்484 /2019/எச்1

**3)** இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனம் டிராக்டர் எண் TN 36 J 6855 ஐ பழுது நீக்கம் செய்து தரக்கோரி சம்மந்தப்பட்ட ஓட்டுனரால் 18.02.2019 அன்று தெரிவிக்கப்பட்டது. பொது சுகாதாரப் பிரிவு வாகனப் பராமரிப்பு செலவினம் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண் 281 நாள்.26.03.2018 இல் நகர்மன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதனையடுத்து மேற்கண்ட பழுது நீக்கம் செய்து தர 07.03.2019 இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்பட்ட பணிமனைதாரரின் பெயர் மற்றும் முகவரி | வாகன பழுது நீக்கம் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், சேலம் மெயின் ரோடு, மேட்டூர் டேம், சேலம். | ரூ.75,900/– |
| 2. | ஜே.வி.கே ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், 279/28-J, JVK கேம்பஸ், கலராம்பட்டி மெயின் ரோடு, சேலம். | ரூ.76,000/– |

**அலுவலகக்குறிப்பு :-**

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தினசரி சேகரமாகும் குப்பைகளை எடுப்பதற்கு மேற்படி வாகனம் பயன்படுத்தப்பட்டு வருவதால் பழுது நீக்கம் செய்வது மிகவும் அவசியமாகிறது.

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1 ல் உள்ள பணிமனைதாரரின் ஒப்பந்தப்புள்ளி மற்றதைக் காட்டிலும் குறைவாக உள்ளது. எனவே, லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் பணிமனைதாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

மன்றத்தீர்மான எண்.355 வரிசை எண்.1 லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் சேலம் மெயின்ரோடு ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4) இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள விவரப்படியான பணிகளை செய்வதற்கு 08.03.2019 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் புதியாக ஒருமுனை மின் மோட்டார்கள் மற்றும் பேனல் போர்டுகள் வாங்குதல் | 2,00,000 | M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 0.12 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. சசிகலா எலக்ரிக்கல் ஓர்க்ஸ் ஒப்பந்ததாரர் | 0.62 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.28 மொடச்சூர் வாரசந்தை வளாகத்தில் கம்பரசர் மோட்டரை மாற்றி புதியதாக Submersible motor pumpset பொருத்தி தண்ணீர் வசதி செய்தல் | 90,000 | M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 0.63 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. சசிகலா எலக்ரிக்கல் ஓர்க்ஸ் ஒப்பந்ததாரர் | 1.89 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :-**

1. மேற்படி பணிகளில் வ.எண்.1–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s.எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
2. வ.எண்.2–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s. எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.356அலுவலககுறிப்பு வரிசை எண்.1 மற்றும் 2 அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

ந.க.எண் 691/2019/எச்1

5) இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவுக்கு 2019–2020ம் நிதியாண்டுக்கு தேவையான கீழ்க்கண்ட விபரப்படியான பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவுகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | விபரம் | உத்தேச செலவினம் ரூ. |
|---|---|---|
| 1 | கொசு ஒழிப்பு பணிகளுக்கு தேவையான மருந்துகள் மற்றும் இதர இனங்கள் வாங்க | 12,00,000 |
| 2 | நோய்க்கிருமிகளை அழிக்க தேவையான பிளிச்சிங் பவுடர் சுண்ணாம்பு தூள் மற்றும் பினாயில் வாங்க | 5,00,000 |
| 3 | துப்புரவு பணியாளர்களுக்கு தளவாட சாமான்கள் வாங்க | 5,00,000 |
| 4 | துப்புரவு பணியாளர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு சீருடைகள், தையல் கூலி, பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் காலணிகள் வழங்க | 10,00,000 |
| 5 | துப்புரவு பிரிவு டீசல் வாகனங்கள் பராமரிப்பு பணிகள் செய்ய, டயர் டியூப், டீசல், ஆயில், கிரீஸ், பேட்டரி வாங்க, சாலை வரி காப்பீட்டு தொகை செலுத்த | 35,00,000 |
| 6 | தூய்மை பணி மேற்கொள்ளும் தள்ளு வண்டிகள் மற்றும் பேட்டரி வாகனங்கள் பழுது பார்க்கவும், டயர், டியூப் வாங்குவதற்கும். | 5,00,000 |
| 7 | 16 வார்டுகளில் தனியார் மூலம் முதல்நிலை சேகரம் செய்யும் பணிகளுக்கு | 3,00,00,000 |
| 8 | நுண் உரக்குடில் மையத்தில் உரம் தயாரிக்க தேவையான நுண் உயிர் திரவம் (Effective Micro Organism) தயாரிக்க | 2,00,000 |
| 9 | நுண் உரக்குடில் மையத்தில் மட்கும் குப்பையிலிருந்து உரம் தயாரிக்க தேவையான இயந்திரங்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய | 3,00,000 |

| | | |
|---|---|---|
| 10 | மட்காத குப்பைகளான பிளாஸ்டிக், பேப்பர், துணிகள் போன்றவற்றை பண்டல் செய்வதற்கு தேவையான பேலிங் மிஷன் மற்றும் அதற்குத் தேவையான பிளாஸ்டிக் கயிர்கள் வாங்க | 3,00,000 |
| 11 | நகராட்சி பள்ளிகளில் தூய்மைப்பணி மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க | 40,00,000 |
| 12 | டம்பர் பின்கள் புதிதாக வாங்கவும் பழுது பார்ப்பதற்கும் | 6,00,000 |
| 13 | பிறப்பு, இறப்பு பதிவேடுகள் பைண்டிங் செய்து பராமரிக்க | 15,000 |
| 14 | தகவல், கல்வி தொடர்பு (IEC) நோட்டீஸ் பேனர் மற்றும் சுவர் விளம்பரம் செய்யும் நடவடிக்கைகளுக்கு | 2,00,000 |
| 15 | தெரு நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்யவும், வெறிநாய்க்கடி தடுப்பூசி போடவும். | 1,00,000 |
| 16 | ஆடுவதை சாலையில் வதை செய்வதற்காக கொண்டுவரும் ஆடுகளை பரிசோதனை செய்ய கால்நடை மருத்துவருக்கான ஆய்வுக்கட்டணம் | 1,00,000 |
| 17 | கலவை உரக்கிடங்கில் கொட்டப்படும் குப்பைகளை இயந்திரங்களை கொண்டு தள்ளுவதற்கு | 7,00,000 |
| 18 | டெங்கு கொசு ஒழிப்பு தினக்கூலி அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள | 35,00,000 |
| 19 | பொதுசுகாதாரப்பிரிவு நாளிதழ் விளம்பரக் கட்டணம் | 3,00,000 |

**அலுவலகக்குறிப்பு:-**

மேற்படி செலவினத்தினை வரிசை எண் 1 முதல் 10 வரையிலும் மற்றும் வரிசை எண் 12 முதல் 19 வரையிலும் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் வ.எண் 11 இல் உள்ள இனத்திற்கு மட்டும் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.

அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.357

6) கோபிசெட்டிபாளையம் நகராட்சி 2018-2019ம் ஆண்டு பொதுநிதி, குடிநீர்நிதி, கல்விநிதி கணக்குகளை 2017-2018ஆம் ஆண்டு கணக்குகள் தயார் செய்து முடித்து கொடுத்த 'சஞ்சய் சொல்யூசன்' அவர்களை வைத்து 2018-2019ஆம் ஆண்டு கணக்குகளை முடிக்கவும் அதற்குண்டான தொகையினை பொதுநிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திரு.ஏ.அழகர்சாமி, 'சஞ்சய் சொல்யூசன்' அவர்களை வைத்து கணக்கு முடித்து கொடுக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.358

7) கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டிட விண்ணப்பங்களுக்கு அனுமதி பெறுதல் தொடர்பான விண்ணப்பங்களுக்கு இந்நகர் மன்றத்தீர்மான எண்.365, நாள்.29.01.2015-ன்படி மூன்று ஆண்டுகளுக்கு கட்டிட அனுமதி வழங்கும் பொருட்டு விலை விகிதம் நிர்ணயிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. தற்போது அரசாணை எண்.18 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) நாள்.04.02.2019-ன்படி தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019-ன் விதி 14-ல் கட்டிட அனுமதி காலம் 5 ஆண்டுகள் மற்றும் ஒருமுறை காலநீடிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால், கட்டிட அனுமதி காலத்தை 5 ஆண்டுகளுக்கு அனுமதி வழங்குவதற்கேற்பவும், கால நீடிப்பு காலத்தை 3 ஆண்டுகளுக்கு வழங்குவதற்கேற்பவும் மாற்றியமைத்த மேற்காண் விதிகளின்படி தற்பொழுது மேற்படி விகிதங்களை தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 197(1பி) மற்றும் 197(1)-ன் கீழ் வழங்கப்படக் கூடிய கட்டிட தொடர்பான உரிமங்கள் மற்றும் அனுமதிக்கான கட்டண விகிதங்களை தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் பிரிவு 321(2)-ன் படி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளபடி திருத்தி அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. கூடுதலாக ஒருமுறை கால நீட்டிப்புக் கோரும் பட்சத்தில் உரிய கட்டண விகிதத்தினை செலுத்தி விண்ணப்பித்தினை பெற்றுக்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :-** தற்போது உள்ள கட்டண விகிதங்களில் இருந்து இணைக்கப்பட்டுள்ள பட்டியலின்படி 01.04.2019 முதல் கட்டிட உரிமக்கட்டணம் வசூலிக்க மன்றம் அனுமதிக்கலாம். மேலும், மனைப்பிரிவு மனை உட்பிரிவு கட்டணம் தொழில் சார்ந்த வல்லுநர்கள் நியமனம் மற்றும் புதுப்பித்தல் கட்டணம் போன்றவைகளுக்கு வசூலிக்கப்படும் கட்டணங்களை திருத்தி அமைத்து நடைமுறைப்படுத்தவும் இதன் விபரத்தினை மாவட்ட அரசிதழ் மற்றும் நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும் அதற்காகும் செலவுத்தொகையினை பொதுநிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

## கோபிசெட்டிபாளையம் நகராட்சி
## திருத்திய கட்டண விபரம்

| வ. எண் | நகராட்சி சட்டபிரிவு | உரிமம் வழங்கப்படும் காரியம் | திருத்திய கட்டணம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | தற்போதைய கட்டணம் | | திருத்திய கட்டணம் | |
| 1 | 2 | 3 | 4 | | 5 | |
| i) | 197 (1) 201 | உறுதிப்படுத்தப்பட்டதன் காரைத்தளம் (ஆர்.சி.சி) அல்லது மதராஸ் தளம் கூரைக்கட்டிடம் (தரை தளத்திற்கும்) பகுதி தளம் மற்றும் பகுதி தளம் மற்றும் பகுதி ஒடு அல்லது தகரம் அல்லது துத்தநாகத்தகடு அல்லது வேறு வகைக்கூறையாகவும் | | | | |
| ii) | | தரைத்தளம் | ரூ.480/– ஒவ்வொரு 10சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | 3 வருடம் | ரூ.800/– | 5 வருடம் |
| iii) | | முதல்மாடி | ரூ.600 ஒவ்வொரு 10சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | 3 வருடம் | ரூ.1000/– | 5 வருடம் |
| iv) | | ஓவ்வொரு முதல் மாடிக்கும் கூடுதல் மாடிக்கும் | ரூ.300 கூடுதல் ஒவ்வொரு 10சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | 3 வருடம் | ரூ.450/– | 5 வருடம் |
| v) | | ஓரே சமயத்தில் தனித்தனியாக கட்டப்படும் ஒரு மாடி 300 சதுர மீட்டருக்கு கூடுதலாக இருந்தாலும் அனுமதிக்கலாம். | – | | – | |
| vi) | | <u>**குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு**</u> தரைதளம் | ரூ.960/– ஒவ்வொரு 10சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | 3 வருடம் | ரூ.1600/– | 5 வருடம் |
| vii) | | முதல்தளம் | ரூ.1200/– ஒவ்வொரு 10சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | 3 வருடம் | ரூ.2000/– | 5 வருடம் |
| viii) | | ஓவ்வொரு முதல் மாடிக்கும் கூடுதல் மாடிக்கும் | ரூ.600/– கூடுதல் ஒவ்வொரு 10சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | 3 வருடம் | ரூ.900/– | 5 வருடம் |
| ix) | | குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் அனுமதியின்றி துவக்கப்படும் பட்சத்தில் கட்டிட அனுமதி கோரி விண்ணப்பிக்கும் போது, உரிமையாணைக் கட்டணத்தொகையில் 50% வீதம் கூடுதலாக அபராத | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | தொகை வசூலிக்கப்படும். | | | 50% | |
| x) | 204 | கட்டிட அனுமதி புதுப்பிக்க | | | கட்டண அனுமதிக்கான அசல் கட்டணம் வசூலிக்கப்படும் | |
| 2 | 197(1) | தனிப்பட்ட கட்டப்படும் திறந்தவகை குளியலறை கழிப்பிடம் அல்லது சிறுநீர் கழிப்பிடம் அல்லது தொட்டிகள் மேல்நிலைத் தொட்டி கட்டுதல்– செப்டிக் டேங்க், போர்வெல் அமைக்க குடியிருப்பு கட்டிடங்களுக்கு | ரூ.450 ஒவ்வொரு 10சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு (ஒவ்வொரு இனத்திற்கும்) | 3 வருடம் | ரூ.600/– | 5 வருடம் |
| 3 | 175 | 1) புதிய மனைப்பிரிவு அனுமதித்தல் | ரூ.20000<br><br>மனைப்பிரிவு அமைக்க உள்ள நிலத்தின் ஒவ்வொரு ஹெக்டேர் பரப்பும் அதன் பகுதிக்கும் | 1 தடவை | ரூ.30,000/– | 1 தடவை |
| 4 | 192<br><br>197(1)(எ) | மனை அங்கீகாரம் ஒவ்வொரு மனையும் அங்கீகரிக்க | ரூ.300 ஒவ்வொரு 100 சதுர மீட்டர் அல்லது பாகத்திற்கு | 3 வருடம் | ரூ.450/– | 5 வருடம் |
| 5 | 197(1B) | கட்டிட அனுமதி குடியிருப்பு கட்டிடங்கள்<br><br>1) குடியிருப்புக்கட்டிடங்கள் கட்ட ஓட்டுக்கட்டிடம், கல்நார் கூரை போன்ற ஒன்று கட்டுவதற்கு அல்லது மீளக்கட்டுவதற்கு (கட்டிடத்தில் செய்யப்படும் மாறுதல்கள் மற்றும் கூடுதல்கள் உள்பட) | ரூ.300<br><br>ஒவ்வொரு 10 சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | 3 வருடம் | ரூ.450/– | 5 வருடம் |
| 6 | 217 | தற்காலிக கட்டுமானங்களும் நிறுவ | ரூ.300/– ஒவ்வொரு<br><br>10சதுரமீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | 3 வருடம் | ரூ.450/– | 5 வருடம் |
| 7 | | <u>**குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு**</u> சாலைகளில் கொட்டப்படும் மணல், செங்கற்கள், ஜல்லிகள் சேகரிக்க.<br>இடிமானப்பொருட்கள் அகற்றுதல் | ரூ.2000/–<br>ஒரு கட்டிட விண்ணப்பத்திற்கு<br><br>ரூ.1000/– | 1 தடவை<br><br>1 தடவை | ரூ.3,000/–<br><br>ரூ.1,500/– | 1 தடவை<br><br>1 தடவை |
| 8 | 204 | 1) வரைபட நகல்கள் கொடுக்க மனுதாரரால் கொடுக்கப்படும் வரை படத்தை அத்தாட்சி செய்து கொடுக்க<br><br>2)மனைப்பிரிவு வரைபடங்கள் | ரூ.250/– ஒரு செட் வரை படத்திற்கு<br><br>ரூ.750<br>ஒரு செட் வரை படத்திற்கு | 1 தடவை<br><br>1 தடவை | ரூ.400/–<br><br>ரூ.1000/– | 1 தடவை<br><br>1 தடவை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | 306 (10C) | நகராட்சி கட்டிடம் கட்டுபவர் மற்றும் வரைபட தயாரிப்பாளர் உரிமம், உரிமக்கட்டணம்<br><br>வரைபட வரைவாளர் பிணைய வைப்புத்தொகை | ரூ.2000/–<br><br>– | வருடத்திற்கு ஒருமுறை<br><br>– | ரூ.5,000/–<br>G.O.no. M.s.18 நாள்:4.2.19<br>ரூ.3,000/– | 5ஆண்டிற்கு<br><br>1 தடவை மட்டும் |
| 10 | | கோபி நகராட்சி எல்லைக்குள் நில அளவை பதிவேடுகளின்படி சர்வே ஆவணங்கள் R.S.R. நகல் மற்றும் சர்வே வரைபட நகல் ஆகியவைக் கொடுக்க கட்டணம் சர்வே எண் ஒன்றுக்கு | ரூ.300/–<br><br>சர்வே எண் ஒன்றுக்கு | | ரூ.450/–<br><br>சர்வே எண் ஒன்றுக்கு | |
| 11 | G.O.no. M.s.18 நாள்: 04.02.2019 | கூர்ந்தாய்வுக் கட்டணம் | - | 2.00 | 1. ச.மீ | 5ஆண்டு களுக்கு |
| 12 | G.O.no. M.s.18 நாள்: 04.02.2019 | 1st Revised Plan | - | 1.00 | 1. ச.மீ | 5ஆண்டு களுக்கு |
| 13 | G.O.no. M.s.18 நாள்: 04.02.2019 | 2nd Revised Plan | - | 40.பைசா | 1. ச.மீ | 5ஆண்டு களுக்கு |
| 14 | G.O.no. M.s.18 நாள்: 04.02.2019 | 3rd Revised Plan | - | 20.பைசா | 1. ச.மீ | 5ஆண்டு களுக்கு |
| 15 | G.O.no. M.s.18 நாள்: 04.02.2019 | மனைப்பிரிவு / மனைஉட்பிரிவு / மனை ஒருங்கிணைப்பு | - | 75.பைசா | 1. ச.மீ | ஒரு முறை மட்டும் |
| 16 | G.O.no. M.s.18 நாள்: 04.02.2019 | உபயோக மாற்றம் ( Reclassification ) | - | 20000.00 | மொத்த பரப்பளவிற்கு | ஒரு முறை மட்டும் |

கோபிசெட்டிபாளையம் நகராட்சி உள்ளூர் திட்டக்குழுமக் கட்டணம்
Development charges for period of 3 years.
( Development charges site )

| வகைப்பாடு | | திருத்தப்பட்ட தொகை | |
|---|---|---|---|
| 1 | | 2 | |
| I. Institution of charges of use from agriculture (or) present use to | | | |
| i) Residential<br>ii) Industrial<br>iii) Commercial<br>iv) Andmisselarion | 1.00 / M2<br>1.50 / M2<br>2.00 / M2<br>2.00 / M2 | | 2.00 / $M^2$<br>3.00 / $M^2$<br>4.00 / $M^2$<br>4.00 / $M^2$ |

Development Charges Building

| I. New Constructions (or) additional to existing construction or First charge of use to | | | |
|---|---|---|---|
| i) Residential<br>ii) Industrial<br>iii) Commercial | 2.00 / M2<br>3.00 / M2<br>4.00 / M2 | | 3.00 / $M^2$<br>5.00 / $M^2$<br>6.00 / $M^2$ |

| <u>Non Residential buildings:-</u> | | | |
|---|---|---|---|
| i) Development Charges for Land<br>ii) Development Charges for Building | 2.00 / $M^2$<br>4.00 / $M^2$ | | 3.00 / $M^2$<br>6.00 / $M^2$ |

அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.**359**

**8)** கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் குடிநீர் ஆதாரம் மற்றும் விநியோகம் மேம்பாடு செய்யும் பணிக்கு பயன்படுத்தப்பட உள்ள DI பைப்புகள், HDPE பைப்புகள், மின் மோட்டார்கள் மற்றும் இதர பொருட்கள் மூன்றாம் தரப்பு ஆய்வு (Third Party Inspection) மேற்கொள்ளும் பணி ரூ.**10.00** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள **06.03.2019**–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** |
|---|---|
| **1** | திருவாளர்.டாக்டர்.அமீன் கன்ட்ரோலர்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை–**1**. |
| **2** | திருவாளர்.குளோபல் ரிமேட் இன்டகரேட்டேடு அக்சஸ் சொலுசன் பிரைவேட் லிமிடெட், சென்னை–**40**. |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதி ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் வரிசை எண்.**2**–ல் உள்ள திருவாளர்.குளோபல் ரிமோட் இன்டகரேட்டேடு அக்சஸ் சொலுசன் பிரைவேட் லிமிடெட், ஒப்பந்ததாரர் போதிய தொழில்நுட்ப தகுதி ஆவணங்கள் இணைக்கப்படவில்லை. வரிசை எண்.**1**–ல் உள்ள திருவாளர்.டாக்டர்.அமீன் கன்ட்ரோலர்ஸ் பிரைவேட் லிமிடெட், ஒப்பந்ததாரர் தொழில் நுட்ப தகுதி பெற்றிருந்ததால் உரிய அறிவிப்பு அனுப்பப்பட்டு **07.03.2019**–ல் விலை விவரங்கள் அடங்கிய உறை திறக்கப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு விலை விகிதம் அளித்துள்ளனர்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த மதிப்பு ரூ. | அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|
| | | | Value of Materials to be Inspected (Ex-Factory Cost In Rs.) | Inspection Charges (As % of Ex-Factory Cost of Materials to be inspected) inclusive of all taxes and duties as applicable (including service tax) |
| 1 | திருவாளர்.டாக்டர்.அமீன் கன்ட்ரோலர்ஸ் பிரைவேட் லிமிடெட், ஒப்பந்ததாரர் | **10,00,000** | Upto Rs. 100.00 Lakhs | 0.56% |
| | | | Above Rs. 100.00 Lakhs and Upto Rs.300.00 Lakhs | 0.54% |
| | | | Above Rs. 300.00 Lakhs | 0.48% |

மேற்படி ஒப்பந்ததாரர் திருவாளர்.டாக்டர்.அமீன் கன்ட்ரோலர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களிடம் விலை குறைப்பு செய்து அளித்திட கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு விலை குறைப்பு செய்து அளித்துள்ளார்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | | விலை குறைப்பு செய்து அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| | | Value of Materials to be Inspected (Ex-Factory Cost In Rs.) | Inspection Charges (As % of Ex-Factory Cost of Materials to be inspected) inclusive of all taxes and duties as applicable (including service tax) | |
| 1 | திருவாளர். டாக்டர்.அமீன் கன்ட்ரோலர்ஸ் பிரைவேட் லிமிடெட், ஒப்பந்ததாரர் | Upto Rs. 100.00 Lakhs | 0.56% | 0.54% |
| | | Above Rs. 100.00 Lakhs and Upto Rs.300.00 Lakhs | 0.54% | 0.52% |
| | | Above Rs. 300.00 Lakhs | 0.48% | 0.45% |

திருவாளர்.டாக்டர்.அமீன் கன்ட்ரோலர்ஸ் பிரைவேட் லிமிடெட் ஒப்பந்ததாரர் விலை குறைப்பு செய்து அளித்துள்ள சதவீத அடிப்படையிலான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

பணிகள் விரைவில் துவக்கப்பட உள்ளதால் மூன்றாம் நபர் தரபரிசோதனை தடையின்றி உடன் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் மேற்படி நிறுவனம் ஏற்கனவே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பதிவு பெற்ற அனுபவம் வாய்ந்த நிறுவனமாக உள்ளதாலும் அவசர அவசியம் கருதி திருவாளர்.டாக்டர்.அமீன் கன்ட்ரோலர்ஸ் பிரைவேட் லிமிடெட், ஒப்பந்ததாரர் அளித்துள்ள விலை குறைப்பு பிந்தைய சதவீத அடிப்படையிலான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.360

டாக்டர்.அமீன் கன்ட்ரோலர்ஸ் பிரைவேட் லிமிடெட், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.

9) ந.க எண் 3422/2014/எச்1

இந்நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகம் 2019-2020 ம் ஆண்டில் செயல்படத் தேவையான கீழ்காணும் செலவினங்களை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.36,25,000 ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | பால் மற்றும் காய்கறிகளுக்கு | ரூ. 5,00,000 |
| 2. | எரிவாயு உருளை | ரூ. 5,00,000 |
| 3. | மளிகை பொருட்கள் | ரூ.10,00,000 |
| 4. | அம்மா உணவக பணியாளர்களுக்கான ஊதியம் | ரூ. 15,00,000 |
| 5. | அரிசி | ரூ. 25,000 |
| 6. | இதர செலவினம் | ரூ. 1,00,000 |
| | மொத்தம் | ரூ. 36,25,000 |

**அலுவலக குறிப்பு:-** மேற்படி செலவினங்களை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.361

10) ந.க.எண்.2157/2018/எச்1

நகராட்சிகளில் பணிபுரிந்து வரும் துப்புரவுப் பணியாளர்கள் நகராட்சி பகுதிகளில் உள்ள தெருக்கள் மற்றும் வீடுகளில் சேகரமாகும் குப்பைக் கழிவுகள், தூசி மணல்கள், சந்தை மற்றும் பேருந்து நிலையங்களில் சேகரமாகும் திடக்கழிவுகளை அகற்றுதல் மழைநீர் வடிகால் மற்றும் சாக்கடைகளில் தேங்கும் அடைப்புகளை நீக்குதல் மற்றும் கழிப்பிடங்களை சுத்தம் செய்தல் போன்ற அத்தியாவசிய அடிப்படை பணிகளை சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு பொது மக்களின் சுகாதரத்திற்காக மேற்படி பணிகளை மேற்கொள்கின்ற துப்புரவுப் பணியாளர்களுக்கு அடிக்கடி உடல் நலக்குறைவு ஏற்படுவதால் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் பங்களிப்புடன் சிறப்பு ஆயுள் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்படும் என 2017–2018 ஆம் ஆண்டிற்கான சட்ட பேரவை அறிவிப்பு எண் 12 இல் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் சட்ட பேரவையில் அறிவிக்கப்பட்டது.

மேற்படி சிறப்பு ஆயுள்காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்துவதற்கான அரசு ஆணை வெளியிட பிரேரனை அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டியுள்ளதால் இப்பொருள் தொடர்பாக உரிய நகர் மன்றத் தீர்மானத்துடன்அனுப்பிவைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக நிதி ஆலோசகர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 16140/2017/எல்ஏ2 நாள். 06.07.2017 இல் கோரப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.** கோபிசெட்டிபாளையம் நகராட்சியை பொருத்தமட்டில் இந்நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட துப்புரவுப் பணியாளர்களின் விவரம் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | அரசு ஆணை எண் 101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி3) நாள். 30.04.1997 இன் படி தேவைப்படும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | 256 |
| 2 | அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | 174 |
| 3 | தற்போது பணிபுரிந்து வரும் துப்புரவுப் பணியாளர்கள் | 115 |
| 4 | காலியாக உள்ள துப்புரவுப் பணியிடங்கள் | 59 |
| 5 | ஒப்பந்த அடிப்படையிலான துப்புரவுப் பணியாளர்கள் | 105 |
| 6 | துப்புரவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மற்றும் இதர படிகள் | ரூ. 410.80 லட்சம் |
| 7 | ஒப்பந்த பணியாளர்களுக்கான ஊதியம் | ரூ. 180.80 லட்சம் |

மேற்படி துப்புரவுப் பணியாளர்களின் பணியானது மிகவும் தேவையான அத்தியாவசிய பணியாகும் துப்புரவுப் பணியாளர்களின் நலனின் அக்கறை கொண்ட சிறப்புத் திட்டம் இதுவாகும். மேலும் இத்திட்டமானது துப்புரவுப் பணியாளர்களின் வாழ்வாதாரத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்த திட்டம் என்பதாலும் இத்திட்டத்திற்கு அரசு ஆணை வெளியிட உள்ளதாலும் இத்திட்டத்தினை நகராட்சி பங்களிப்புடன் செயல்படுத்த நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு பிரேரனை அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.362

11) கோபிசெட்டிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் பயன்பாட்டில் இருந்துவந்த 'Intercom' பழுதடைந்துள்ளது. மேற்படி Intercom–ல் உள்ள பழுதுகளை நீக்கம் செய்து, ஒயரிங் பழுதடைந்துள்ள இடங்களில் புதியதாக ஒயரிங் செய்திடவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.14,000/– (ரூபாய் பதினான்காயிரம் மட்டும்) மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.**363**

12) இந்நகராட்சிக்கு சொந்தமான கடைகள் மற்றும் நிலங்கள் பொது ஏலம் விடப்பட்டு 31.03.2017 உடன் 9 ஆண்டுகள் முடிவடைந்த நிலையில், அரசு ஆணை எண் 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007 -ன் படி அப்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு, மேற்படி மறுநிர்ணயம் செய்யப்பட்ட வாடகையினை வசூல் செய்திட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களில் செயல்முறை ஆணை ந.க. எண் 1842/2014/அ3 நாள்: 23.03.2018 ல் ஒப்புதலுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, மேற்படி மறு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையினை ஏற்பது குறித்து 31.03.2017 உடன் 9 ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் உள்ள சம்மந்தப்பட்ட கடைகளின் குத்தகைதாரர்களுக்கு இவ்வலுவலக ந.க.எண்3060/2016/அ3 நாள்: 02.05.2018 ல் அறிவிப்பு அனுப்பப்பட்டதில், பழைய பேருந்து நிலையம் கடை எண் 42 ன் குத்தகைதாரர் திரு.எஸ்.பாலமுருகன் என்பவர் மேற்படி மறு நிர்ணயம் செய்யப்பட்டு உயர்வு செய்யப்பட்ட வாடகை செலுத்துதல் குறித்து எவ்வித தகவலும் நகராட்சிக்கு அளிக்காமல் 26.02.2019 முதல் கடைகளை காலி செய்துவிட்டதாகவும் மேற்படி கடை 27.02.2019 முதல் நகராட்சி வசம் ஏற்றுக்கொண்டதாகவும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் 5.3.2019 அன்று வருவாய் ஆய்வர் அறிக்கை அளித்துள்ளார்.

எனவே மேற்படி பழைய பேருந்து நிலையம் கடை எண் 42 யை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான ஏல அறிக்கையை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேற்படி கடைகளுக்கு மறு ஏலம் விட்டு ஏலம் எடுத்த குத்தகைதாரர்கள் வசம் கடைகள் ஒப்படைக்கும் காலம் வரை நகராட்சிக்கு ஏற்படும் அனைத்து இழப்பிற்கும் முன்னால் குத்தகைதாரர் திரு. எஸ்.பாலமுருகன் என்பவரை முழு பொறுப்பாக்கி, நீதிமன்றம் மூலம் வழக்கு தொடந்து இழப்பீட்டு தொகையினை அவர்களிடமிருந்து சட்ட ரீதியாக வசூல் செய்யவும் மேற்படி சட்ட ரீதியாக வசூல் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மேலும் மேற்படி கடைகளுக்கு உண்டான கேட்புத் தொகையினை் மார்ச் 2019 முதல் கணினி கேட்பிலிருந்து நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண் 3060/2016 /அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.**364**

13) இந்நகராட்சிக்கு சொந்தமான கடைகள் மற்றும் நிலங்கள் பொது ஏலம் விடப்பட்டு 31.03.2018 உடன் 9 ஆண்டுகள் முடிவடைந்த நிலையில், அரசு ஆணை எண் 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007 -ன் படி அப்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு, மேற்படி மறுநிர்ணயம் செய்யப்பட்ட வாடகையினை வசூல் செய்திட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களில் செயல்முறை ஆணை ந.க. எண் 1842/2014/அ3 நாள்: 31.10.2019 ல் ஒப்புதலுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, மேற்படி மறு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையினை ஏற்பது குறித்து 31.03.2018 உடன் 9 ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் உள்ள சம்மந்தப்பட்ட கடைகளின் குத்தகைதாரர்களுக்கு இவ்வலுவலக ந.க.எண்2230/2017/அ3 நாள்: 08.11.2018 ல் அறிவிப்பு அனுப்பப்பட்டதில், பழைய பேருந்து நிலையம் கடை எண் 17 ன் குத்தகைதாரர் திரு.கருப்புசாமி என்பவர் மேற்படி மறு நிர்ணயம் செய்யப்பட்டு உயர்வு செய்யப்பட்ட வாடகை செலுத்துதல் குறித்து எவ்வித தகவலும் நகராட்சிக்கு அளிக்காமல் 28.02.2019 முதல் கடைகளை காலி செய்துவிட்டதாகவும் மேற்படி கடை 01.03.2019 முதல் நகராட்சி வசம் ஏற்றுக்கொண்டதாகவும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் 5.3.2019 அன்று வருவாய் ஆய்வர் அறிக்கை அளித்துள்ளார்.

எனவே மேற்படி பழைய பேருந்து நிலையம் கடை எண் 17 யை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான ஏல அறிக்கையை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேற்படி கடைகளுக்கு மறு ஏலம் விட்டு ஏலம் எடுத்த குத்தகைதாரர்கள் வசம் கடைகள் ஒப்படைக்கும் காலம் வரை நகராட்சிக்கு ஏற்படும் அனைத்து இழப்பிற்கும் முன்னால் குத்தகைதாரர் திரு. கருப்புசாமி என்பவரை முழு பொறுப்பாக்கி, நீதிமன்றம் மூலம் வழக்கு தொடந்து இழப்பீட்டு தொகையினை அவர்களிடமிருந்து வசூல் சட்ட ரீதியாக செய்யவும் மேற்படி சட்ட ரீதியாக வசூல் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மேலும் மேற்படி கடைகளுக்கு உண்டான கேட்புத் தொகையினை் மார்ச் 2019 முதல் கணினி கேட்பிலிருந்து நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 2230/2017 /அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.**365**

14) நகராட்சி சட்ட திருத்தங்களின்படி **01.10.2017** இரண்டாம் அரையாண்டு முதல் கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதித்ததை எதிர்த்து தனியார் கல்வி நிறுவனமான தாளாளர் அமலா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, கோபி என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு எண்கள் W.P.No.36621/2018, W.P.No.31426/2018 மற்றும் W.P.No.31418/2018–ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கினை எடுத்து நகராட்சி சார்பாக நடத்தவும் மேற்காண் வழக்கிற்காகும் வழக்கறிஞர் கட்டணம் ரூ.**15,000/–**ஐ செலுத்த திரு.B.ஆனந்த் அரசு வழக்கறிஞர், உயர்நீதிமன்றம் சென்னை அவர்கள் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். எனவே மேற்காண் வழக்கினை எடுத்து நடத்தவும் அதற்காகும் செலவினத்தை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.**366**

15) இவ்வலுவலகத்திற்கு தேவையான எழுது பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள் அறிவிப்பு வழங்கும் கணினி பேப்பர் மற்றும் கணினி வரிவிதிப்பு இரசீதுகள் சேவை மைய இரசீதுகள் **2019–20**ஆம் ஆண்டிற்கு தேவைக்கேற்ப அவ்வப்போது அரசு அங்கீகாரம் பெற்ற கோயமுத்தூர் மாவட்ட அச்சக சேவை தொழிற்கூட்டுறவு சங்கம் லிமிடெட் No.IND/1996/CBE நிறுவனத்தில் வாங்கிக்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.**10,00,000/–** (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.**367**

16) இவ்வலுவலகத்தில் அனைத்து பிரிவுகளில் உள்ள கணினி பிரிண்டர்களுக்கு தேவையான டோனர்கள் **2019–2020**ஆம் ஆண்டிற்கு தேவைக்கேற்ப அவ்வப்போது அரசு அங்கீகாரம் பெற்ற ஈரோடு மாவட்ட பெண்கள் எழுதுபொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவு சங்கம் லிட், நெ.இண்ட் **1312, 64/76**, விநாயகர் கோவில் வீதி–**2**, மூலப்பாளையம், ஈரோடு – **638002** என்ற நிறுவனத்திடம் வாங்கிக்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.**20,00,000/–**க்கு (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்துகொள்ளலாம்.

அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.**368**

17) தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் **2019**ல், நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகத்தின் சுற்றறிக்கையின் படி (ந.க.எண்.**50977/2018**/டிபி3, நாள்.**07.03.2019**)ன் படி தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் **2019**ல் தெரிவித்துள்ளபடி **01.04.2019** முதல் தொழில் சார்ந்த வல்லுநர்கள் நியமனம் செய்தல் குறித்த நடைமுறை விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளின் படியும் மேலும் Screening Committee அமைத்து சான்று பெற்ற நபர்களை மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே ஆணையாளர், நகரமைப்பு அலுவலர் / பொறியாளர், நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோரை கொண்டு Screening Committee அமைத்திடவும் பெறப்படும் மனுக்களை சரிபார்ப்பு செய்து உரிய உத்திரவுகள் வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.**369**

18) கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பீட்டர் வீதியில் குடியிருப்புக்கட்டிடம் கட்ட அனுமதி கோரியது தொடர்பாக திருமதி.ஈஸ்வரி என்பவர்**(1)** மாவட்ட ஆட்சியர் ஈரோடு **1**ம் பிரதிவாதியாக **(2)** நகராட்சி ஆணையாளர் **2**ம் பிரதிவாதியாக **(3)** நகரமைப்பு ஆய்வாளர் **3**ம் பிரதிவாதியாக சேர்த்து கோபிசெட்டிபாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.203/2018-ன் படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கினை நகராட்சி சட்ட ஆலோசகர் மூலமாக நடத்துவதற்கும் அதற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கும் நகராட்சி நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.**370**

19) கோவை நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு இந்நகராட்சியின் **2019–2020**ஆம் ஆண்டிற்கான பங்குத்தொகை ரூ.**90,000/–** அரசாணை எண்.**145** M.A & W.S (ME-1) Dept நாள்.**21.09.2011–**ன்படி செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.**371**

20) இந்நகராட்சியில் 2019–2020ம் ஆண்டிற்கு நகராட்சி ஆணையாளர், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அலுவலக பணி நிமித்தமாக வெளியூர்களுக்கு அவ்வப்போது, பயணம் மேற்கொள்ளும்போது, பயணப்படி தொகை வழங்கிட உத்தேச செலவினம் ரூ.4,00,000/– (ரூபாய் நான்கு லட்சம்)ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியாளர்கள் அவ்வப்போது, ஆணையர் அனுமதியுடன் அலுவலக வேலையாக வெளியூர் சென்று வந்தமைக்கு பயணப்படி வழங்கலாம்.

அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.372

21) கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 பழைய ஆஸ்பத்திரி வீதியில் இணை சார் பதிவாளர் அலுவலகம் இயங்கி வரப்பட்டு பின்னர் கட்டிடம் இடிக்கப்பட்டு, கட்டுமானப்பணி நடைபெற்றதால், 205–16 முதல் அரையாண்டு முதல் மேற்படி அலுவலகத்திற்கு காலியிட வரிவிதிக்கப்பட்டு, காலியிட வரி வரிவிதிப்பு எண். பழையது 057/103504, புதியது 057/015/00551 என வரிவிதிப்பு செய்யப்பட்டது. மேற்படி காலியிட வரிவிதிப்பினை மேற்காண் அலுவலகத்தால் செலுத்தப்படாமல் 2018–19 முதல் அரையாண்டு வரை நிலுவையாக இருந்துவந்தது. மேற்காண் அலுவலகம் ஒருங்கிணைந்த சார்பதிவாளர் அலுவலகமாக மாற்றப்பட்டு, கட்டிடம் கட்டப்பட்டதால், அலுவலகம் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்காண் கட்டிடத்திற்கு 2015–16 முதல் 2018–19 வரையிலான காலங்களுக்கு சொத்துவரியாக புதிய வரிவிதிப்பு எண்.057/015/00556 என முந்தைய ஆண்டுகளுக்கு முன் தேதியிட்டு, சொத்துவரி வரிவிதிப்பு செய்யப்பட்டது. மேற்காண் கட்டிட வரியானது காலியிட வரியைவிட கூடுதலாக சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் கட்டிடத்திற்கு 2016–17 இரண்டாம் அரையாண்டு வரை மேற்படி அலுவலகத்தால் தொகை செலுத்தப்பட்டுள்ளது. எனவே அலுவலகத்துக்கு சொத்துவரி விதிக்கப்பட்டு உள்ளமையால், காலியிட வரி விதிப்பு எண். பழையது 057/103504, புதியது 057/015/00551–ஐ 2015–16 முதல் 2018–19ஆம் ஆண்டு வரை தொகை ரூ.58,968/–ஐ நிலுவை மற்றும் நடப்பு கேட்பிலிருந்து நீக்கம் செய்ய சம்மந்தப்பட்ட வருவாய் உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வர் தனது 04.03.2019ஆம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

எனவே, மேற்காண் உதவிப்பதிவாளர் அலுவலகத்திற்கு காலியிட வரியாக நிர்ணயம் செய்யப்பட்ட வரியினை 2015–16 முதல் 2018–19ஆம் ஆண்டு வரையிலான காலங்களுக்குரியது கேட்பிலிருந்து வரிவிதிப்பினை நீக்கம் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**இந்நகராட்சி வருவாய் உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வர் குறிப்பின்படி உதவிப்பதிவாளர் அலுவலகத்திற்கான காலியிட வரிவிதிப்பு எண்.057/103504 மற்றும் புதிய வரிவிதிப்பு எண்.057/015/00551–க்கான வரி 2015–16 முதல் 2018–19 (31.03.2019) வரையிலுள்ள நிலுவை மற்றும் நடப்பு ஆண்டுத்தொகை ரூ.58,968/–ஐ கேட்பிலிருந்து வரி விதிப்பினை நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.373

22) உள்ளாட்சி தேர்தல் சம்பந்தமாக வாக்கு சாவடி பட்டியல், வாக்காளர் பட்டியல், வாக்குச்சீட்டுகள், வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு ஊதியம் வழங்குதல், இதர செலவினங்கள். படிவங்கள் மற்றும் எழுதுபொருட்கள் போன்ற செலவினங்கள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.15.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.374

23) தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் – 2019–னை, அரசாணை நிலை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA1) நாள்.04.02.2019–ல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டு அதனை தமிழ்நாடு அரசிதழில், அரசிதழ் எண்.43, நாள்.04.02.2019–ல் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை எண் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–னை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.375

ந.க.எண் 607 /2019/எச்1

24) கோபிசெட்டிபாளையம் நகராட்சி பொது சுகதாராப் பிரிவில் ஒப்பந்தரார்கள் மற்றும் விநியோகஸ்தர்களின் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரி மற்றும் சேவை வரி ஆகியவற்றினை சம்மபந்தப்பட்ட துறைகளுக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும். அவ்வாறு நகராட்சியின் சார்பாக திரு. எஸ். சக்திவேல் (GST Income Tax) ஆடிட்டர் அவர்களிடம் இப்பணியை ஒப்படைப்பு செய்யவும் இதற்கான உத்தேச செவவினம் ரூ. 10000/ க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.376

25) கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் IUDM 2018–19–ன் கீழ் 'குடிநீர் ஆதாரம் மற்றும் குடிநீர் விநியோகம் மேம்பாடு' செய்யும் பணிக்கு பயன்படுத்தப்பட உள்ள DI பைப்புகள், HDPE பைப்புகள், மின்மோட்டர்கள் மற்றும் இதர பொருட்கள் மூன்றாம் தரப்பு ஆய்வு (Third party Inspection) மேற்கொள்ளும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்து கொடுத்தமைக்கான விளம்பரக்கட்டணம் ரூ.8602/–(ரூபாய் எட்டாயிரத்து அறுநூற்றி இரண்டு மட்டும்) 'Express Publications (Madurai) Private Limited' நிறுவனத்திற்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.377

26) இந்நகராட்சி குத்தகைதாரர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்ட குத்தகை தொகைக்கு சேவைவரி வசூல் செய்யப்பட்டு வருகிறது. நிலுவை ஆண்டுகளுக்கு வசூல் செய்யப்பட்ட சேவை வரி தொகைக்கு வட்டி மற்றும் தண்ட வட்டி செலுத்தப்பட வேண்டும் என மத்திய கலால் மற்றும் சுங்கத்துறை ஆணையர் (Appeals) சேலம் அவர்கள் மேல் முறையீட்டு எண்.98/2015 நாள்.26.05.2015–ன்படி உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சேவை வரிக்கு வட்டி மற்றும் வட்டியை செலுத்துவதை ஆட்சேபனை செய்து நகராட்சியால் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை நகராட்சி சார்பாக ஏற்று நடத்தவும் அதற்கான கலந்தாய்வு கட்டணம் ரூ.10,000/– வழங்க வழக்கறிஞர் திரு.கண்ணப்பன், அவர்களிடமிருந்து கடிதம் எண்.17/2018–19 நாள்.10.01.18–ல் பெறப்பட்டுள்ளது. இப்பொருள் குறித்து மன்றத்தீர்மான எண்.689 நாள்.30.11.2016–ல் ரூ.7000/–ற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மீதம் ரூ.3000/– ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.378

27) கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஆண்டு குத்தகை இனமான புதிய பேருந்து நிலையத்தில் நவீன கட்டணக்கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமை திருமதி.எம்.பார்வதி என்பவருக்கு 01.04.2016 முதல் 31.03.2019 வரை இந்நகர்மன்ற தீர்மான எண்.371 நாள்.29.01.2016ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தது. மேற்படி குத்தகை இனத்தின் உரிமை காலம் 31.03.2019 உடன் முடிவடைவதால், அவற்றை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர இந்நகர்மன்ற தீர்மான எண்.239 நாள்.30.11.2018ல் அனுமதி அளித்துள்ளது. 07.01.2019ல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. 06.03.2019 வரை 6 முறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றுள்ளது. மேற்படி 6 முறையும் ஏலம் மற்றும் ஒப்புந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. வருவாய் ஆய்வர் குறிப்பில் புதிய பேருந்து நிலையம் நவீன கட்டணக் கழிப்பிடத்தின் உரிமை காலம் 31.03.2019 உடன் முடிவடைவதால் 01.04.2019 முதல் துறைரீதியாக வசூல் செய்யலாம் என தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி மேற்படி இனத்திற்கு 01.04.2019 முதல் துறைரீதியாக வசூல் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி புதிய பேருந்து நிலைய கட்டணக் கழிப்பிடத்தில் வசூல் செய்யும் உரிமைக்கு கட்டணச்சீட்டு அச்சடிக்க உத்தேச செலவு ரூ.1,50,000/–க்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. அவசர அவசியம் கருதி உள்ளூர் அச்சகத்தில் அச்சடித்து சென்று குறுகிய கால விலைப்புள்ளி பெற்று குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.379

28) இந்நகராட்சியில் தூய்மை பாரதம் இயக்கம் – திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு பேட்டரியில் இயங்கும் வாகனம் 29 எண்ணிக்கை விநியோகம் செய்யும் பணியினை ரூ.52.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.1191 / 2019 / பி3 நாள்.21.01.2019–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு 14.02.2019–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | திருவாளர். அருண் இண்டியன் மோட்டார்ஸ் |
| 2 | திருவாளர். நெப்டியூன் ஆட்டோமேசன் |
| 3 | திருவாளர். பிரியம் இன்டஸ்ட்ரீஸ் & இஞ்சினியரிங் பி.லிட். |

மேற்படி மூன்று ஒப்பந்ததாரர்களில் கீழ்காணும் மூன்று ஒப்பந்ததாரர்களும் தொழில் நுட்ப தகுதி பெற்றிருந்ததால் உரிய அறிவிப்புகள் அனுப்பப்பட்டு விலை விவரங்கள் அடங்கிய உறை 04.03.2019 அன்று காலை 11.00 மணிக்கு திறக்கப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு விலை விகிதம் அளித்துள்ளனார்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த மதிப்பு ரூ. | அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திருவாளர். பிரியம் இன்டஸ்ட்ரீஸ் & இஞ்சினியரிங் பி.லிட். | 5220000.00 | 100.00 % மதிப்பீட்டு விலை விகிதத்தில் அளித்துள்ளனர் (ரூ.5220000.00) |
| 2 | திருவாளர்.அருண் இண்டியன் மோட்டார்ஸ் | 5220000.00 | 0.28 % மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட குறைவு (ரூ.5205500.00) |
| 3 | திருவாளர்.நெப்டியூன் ஆட்டோமேசன் | 5220000.00 | 1.39 % மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட குறைவு (ரூ.5147500.00) |

மேற்படி விலை விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** மேற்படி பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **1.39** சதவீதம் குறைவாக குறிப்பிட்டுள்ள திருவாளர்.நெப்டியூன் ஆட்டோமேசன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

திருவாளர்.நெப்டியூன் ஆட்டோமேசன் ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.மன்றத்தீர்மான எண்.**380**

**29)** கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் குடிநீர் ஆதாரம் மற்றும் குடிநீர் விநியோகம் மேம்பாடு செய்யும் பணியினை IUDM 2018-19 திட்டத்தில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம் ஏ2) துறை அரசாணை (எம் எஸ்) எண் 82 நாள்.23.08.2018–ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் **13.11.2018–ல்** நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்ட நடவடிக்கைகளில் மேற்படி திட்டத்திற்கு திட்ட மேலாண்மை ஆலோசகராக (PMC) Tamil Nadu Water Investment Company (TWIC) –ஐ நிறுவனத்தை நியமனம் செய்தி கொள்ள பத்தி எண்.7–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு Project Management Consultant (PMC) ஆக M/S.TWIC நிறுவனத்தினை நியமித்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1. TWIC நிறுவனத்தினை மேற்படி பணிக்கு Project Management Consultant (PMC) ஆக நியமிக்க அனுமதி அளிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை மேற்படி திட்ட நிதி (அல்லது) நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

அனுமதி அளிக்கப்பட்டது.மன்றத்தீர்மான எண்.**381**

**30)** கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட **30** வார்டுகளில் உள்ள குடிநீர் இணைப்புகளின் கேட்பு வசூல் நிலுவை பதிவேடு வார்டு வாரியாக பிரிண்ட் & பைண்டிங் செய்யும் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ வாணி விலாஸ் பிரஸ் 47, வாய்க்கால் ரோடு, கோபி. | ரூ.4900/– |
| 2. | ஸ்ரீ சத்தி விநாயகர் ஆப்செட், பச்சமலைரோடு, KVR காம்ப்ளக்ஸ், கோபி. | ரூ.25/– |
| 3. | ஸ்ரீ அங்காளம்மன் ஆப்செட்& புக்பைண்டிங் ஒர்க்ஸ், 5 கார்னர், வாய்க்கால் ரோடு, கோபி. | ரூ.20/– |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் அளித்துள்ள ஸ்ரீ அங்காளம்மன் ஆப்செட்& புக்பைண்டிங் ஒர்க்ஸ், 5 கார்னர், வாய்க்கால் ரோடு, கோபி என்பவரது விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

அங்கீகரிக்கப்பட்டது.மன்றத்தீர்மான எண்.**382**

31) Nowaste Fuel Free Combustible Solid Waste Incinerator Plant to be commissioned in Gobichettipalayam Municipality, Erode District, near Ramar Extension, Lakkampatti Village, Ward No 2, with financial support from Rotary Club of Erode and Olirum Erodu Foundation, Erode at an estimate cost of Rs.16 Lakhs, based on the reference letter received from the Governor, Rotary Club of Erode. The subject letter is presented for Consideration.

1. Approved costs to provide Nowaste Fuel Free Combustible Solid Waste Incinerator Plant with belt, Shedder, Conveyor and other Accessories –Rs.16 Lakhs/-
2. Platform, Shed, Maintenance and operating cost to be provided by the Gobichettipalayam Municipality.
3. Water and adequate electric power supply to be provided by the Municipality.
4. For smooth functioning of the project the Municipality must appoint sufficient workers for operating the Nowaste Incinerator.

**Office Note:-** May be Considered and Approved.

Approved. மன்றத்தீர்மான எண்.**383**

**32)** கோபிசெட்டிபாளையம் நகராட்சிகுட்பட்ட **30** வார்டுகளில் உள்ள குடிநீர் இணைப்புகளுக்கான **2018–19** ஆண்டிற்கான கேட்பு வசூல் மற்றும் நிலுவை பதிவேடு (Demand Register) வார்டு வாரியாக தனித்தனியாக பிரிண்ட் செய்து Booklet-ஆக தைக்கும் பணிக்கு உத்தேச

செலவினம் ரூ.4700/— ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது.மன்றத்தீர்மான எண்.384

33) இந்நகராட்சிக்கான 2018—19ம் ஆண்டுக்கான சொத்துவரி, காலியிடவரி, தொழில்வரி பல்வகை கேட்புகள் ஆகிய இனங்களுக்கான கேட்பு வசூல் நிலுவை கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்தும், அதனை பைண்டிங் செய்யவும், மேலும் சொத்துவரி சீராய்வுக்கான கணக்கீட்டுத்தாள் மற்றும் வரி விதிப்பு பதிவேடுகள் பிரிண்டிங் எடுத்தமைக்கு ஸ்டார் பிரிண்டிங் & ஸ்டேசனரீஸ் கோபி அவர்கள் செய்தமைக்கு செலவினம் ரூ.17515/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது.மன்றத்தீர்மான எண்.385

34) கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் தினசரி சந்தையின் பழைய கட்டிடத்தினை அகற்றிவிட்டு புதிதாக அடித்தளம் மற்றும் இரண்டு தளங்கள் கட்டுமானப்பணி செய்வது தொடர்பாக Type Design Approval பெறுவது தொடர்பான வரைபடங்கள் தயாரித்தல் EDCR முறையில் விண்ணப்பத்தில் மற்றும் புளூபிரிண்ட் வரைபட நகல்கள் ஆகியன தயார் செய்யும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.320, நாள்.28.02.2019—ன்படி ரூ.60,000/—க்கு மன்றம் அனுமதி வழங்கியுள்ளது தினசரி சந்தையின் வரைபடங்கள் தயார் செய்தல் EDCR முறையில் விண்ணப்பித்தும் Blue Print தயார் செய்தல் 2 வரைபடங்களுக்கு அனுமதி பெறுதல் தொடர்பான பணியினை மேற்கொள்ளுவதற்கு விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

1. ஸ்ரீ விவேக் பில்டர்ஸ், 50B, யாகூப் வீதி, கோபி — ரூ.57,200/—
2. ஸ்ரீ பில்டர்ஸ், 5/318B, ஸ்டேட் பேங்க் காலணி, சேலம்—4. — ரூ.56,400/—
3. ஸ்ரீ ராம் பில்டர்ஸ், 23, கபிலர் வீதி, கோபி — ரூ.57,600/—

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கோரிய ஸ்ரீ பில்டர்ஸ், சேலம்—4 என்ற நிறுவனத்திடம் பணியினை ஒப்படைத்து பணியினை முடிக்கவும், மேற்படி நிறுவனத்திற்கு தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது.மன்றத்தீர்மான எண்.386

35) அரசாணை எண்.64 நிதி (உள்ளாட்சி நிதி நாள்) 17.01.1994 மற்றும் நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 63 (அ) ) —ல் தெரிவித்துள்ளவாறும், இந்நகராட்சியின் 2017 – 2018 ஆண்டுத்தணிக்கை பத்தி எண்.28 (வருவாய் நிதி) – ல் குறிப்பிட்டுள்ள தணிக்கைத்தடை கணக்கீட்டுத்தாளின்படி 2017—18ஆம் ஆண்டுக்கு இந்நகராட்சி செலுத்த வேண்டிய தணிக்கை கட்டண இறுதி நிலுவைத்தொகை ரூ.2,94,897/—ஐ அரசு தலைப்பில் செலுத்த வே.ண்டியுள்ளதால், மேற்படி செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது.மன்றத்தீர்மான எண்.387

36) கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள தினசரி அங்காடி கட்டிடமானது மிகவும் பழுதடைந்துள்ளதால் அதனை இடித்துவிட்டு புதிதாக நவீன வசதிகளுடன் கூடிய தினசரி அங்காடியில் அடித்தளம் (Basment floor) தரைதளம் மற்றும் முதல் தளம் ஆகியன கட்டுவதற்க்கு உரிய விரிவான திட்ட அறிக்கை 9.00கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு நிதி ஒதிக்கீடு பெற்று ,கட்டிட பணிகள் செய்வதற்க்கு உரிய வரைபடங்கள் தயார் செய்து EDCR முறையில் விண்ணபித்து துணை இயக்குநர், நகரமைப்புத்துறை, சேலம்அவர்களுக்கு அனுப்பி வைத்து உரிய 'TYPE DESIGN APPROVEL' பெறப்பட வேண்டும். எனவே மேற்படி பணிக்குரிய 'TYPE DESIGN APPROVEL' பெறுவதற்கு மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது.மன்றத்தீர்மான எண்.388

ஒம்./— திரு.சு.சம்பத்குமார்,
தனி அலுவலர்

// உண்மை நகல் // உத்திரவுப்படி //

ஆணையாளர்(பொ)
கோபிசெட்டிபாளையம் நகராட்சி